
தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

E WORD OF CHRIST



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜூனன்

மரம் 10 ஜனவரி 2010 கனி 2

# புதிய ஆண்டு

புதுபெலனைப் பெற்றுக்கொள்ள – ஏசா.40:31

புதிதும் ஜீவனுமான மார்க்கத்தில் நிலைக்க – எபி.10:19

புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ள – ரோம.6:4

புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்ய – ரோம.7:6

புது உடன்படிக்கையின் கீழ் ஊழியம் செய்ய – 2கொ.3:6

புதுஉடன்படிக்கையின் இரத்தத்தை நினைவுகூர – மத்.26:28

புதிய பாட்டைப்பாட – வெளி.5:10

புது உடன்படிக்கையின் மத்தியஸ்தர் மூலம் ஜெபிக்க – எபி.9:15

புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல இருக்க – 1பேது.2:3

புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென காத்திருக்க – 2பேது.3:13






## கிறிஸ்துவின் வசனம்

வழங்கும்

தொலைக்காட்சி நிகழ்ச்சி

தமிழன் TV யில் திங்கள் காலை 6.00-6.15


இமயம் TV யில் புதன் காலை 6.30-6.45



**ரேடியோ நிகழ்ச்சி**

இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில்

ஒவ்வொரு சனி மாலை 5.30 முதல் 5.45 மணி வரை



கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

**Website: www.thewordofchristindia.com**




"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
## *THE WORD OF CHRIST*

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 10 ஜனவரி - 2010 கனி - 2


ஆசிரியருரை



# அவிசுவாசம்
# Unbelief

அவிசுவாசம் - Unbelief. இது நம்பிக்கை இல்லாமையைக்குறிக்கிறது. இன்றைக்கு அநேகர் நம்பிக்கையில்லாமல் இருப்பதைப்போல. இயேசுவின் நாட்களிலும் நம்பிக்கையில்லாதவர்கள் இருந்தார்கள். குறிப்பாக இயேசுகிறிஸ்து வளர்ந்த ஊராகிய நாசரேத்திலும் இப்படிப்பட்டவர்கள் காணப்பட்டார்கள். “இவன் தச்சன் அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா? யாக்கோபு யோசே யூதா சீமோன் என்பவர்களுக்குச் சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா என்று சொல்லி, அவரைக் குறித்து இடறலடைந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் இனத்திலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார். அங்கே அவர் சில நோயாளிகள்மேல் கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கினதேயன்றி, வேறொரு அற்புதமும் செய்யக்கூடாமல், அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டு, கிராமங்களிலே சுற்றித்திரிந்து, உபதேசம்பண்ணினார்” (மாற்.6:3-6). இயேசுவின் உபதேசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டு, இவ்விதமான ஞானம் இவருக்கு எப்படிவந்தது என்று ஆச்சரியப்பட்டார்களே தவிர அவருடைய உபதேசத்திற்குக் கீழ்ப்படியவுமில்லை, அவரை விசுவாசிக்கவுமில்லை. ஆகையால், அநேக இடங்களில் அற்புதங்களைச் செய்து கொண்டு வந்த ஆண்டவர் இயேசுகிறிஸ்து தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்தில் அவர் சில நோயாளிகள்மேல் கைகளை வைத்து அவர்களைக் குணமாக்கினதேயன்றி வேறொரு அற்புதமும் அங்கே செய்யவில்லை என்று காண்கிறோம். அவரால் அற்புதம் செய்யமுடியாமல் அல்ல. அவர்களுடைய அவிசுவாசத்தினாலே அவர் அங்கே மேலும் அற்புதம் செய்யவில்லை. அவரால் கூடாதது ஒன்றுமில்லை என பரிசுத்தவேதம் நமக்கு

போதிக்கிறது. எப்பேர்பட்ட வியாதியஸ்தனாயிருந்தாலும் அவனை அவர் சுகபடுத்தவல்லவராயிருக்கிறார். அவர்களுடைய அவிசுவாசத்தைக்குறித்து அவர் ஆச்சரியப்பட்டார். உங்களுடைய விசுவாசம் எப்படிப்பட்டதாயிருக்கிறது?

ஒருமுறை அவர் உபதேசித்துக்கொண்டிருக்கிறபோது, சில மனுஷர் திமிர்வாதக்காரனை படுக்கையோடே எடுத்துக்கொண்டுவந்து ஜனக்கூட்டம் மிகுதியாயிருந்தபடியால் அவனை இயேசுவின் முன்பாக கொண்டுபோக இயலாமல் தட்டோடுகள் வழியாய் ஜனங்களின் மத்தியில் இயேசுவுக்கு முன்பாக அவனைப் படுக்கையோடே இறக்கினார்கள். அவர்களுடைய விசுவாசத்தை அவர் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மனுஷனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார். அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும் யோசனைபண்ணி, தேவதூஷணம் சொல்லுகிற இவன் யார்? தேவன் ஒருவரேயன்றி பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார் என்றார்கள். "இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: உங்கள் இருதயங்களில் நீங்கள் சிந்திக்கிறதென்ன? உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது? பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டுமென்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். உடனே அவன் அவர்களுக்கு முன்பாக எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, தேவனை மகிமைப்படுத்தி, தன் வீட்டுக்குப்போனான்" (லூக்.5:22-25). அதினாலே எல்லாரும் ஆச்சரியப்பட்டு, தேவனை மகிமைப்படுத்தினார்கள்; அல்லாமலும், அவர்கள் பயம் நிறைந்தவர்களாகி, அதிசயமான காரியங்களை இன்று கண்டோம் என்று சொல்லிக்கொண்டார்கள். ஆம், பிரியமானவர்களே இயேசு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற பூமிக்கு வந்தார். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என அறிகிறோம்.

மோசேயை கர்த்தர் தெரிந்துகொண்டு அனுப்பும்போது; அவன், அவர்கள் என்னை நம்பார்கள், என் வாக்குக்குச் செவிகொடார்கள் என்று சொன்னான். அப்பொழுது கர்த்தர் உன்னிடத்தில் இருக்கிறது என்ன என்றார். ஒரு கோல் என்றான். அதை கீழேபோடு என்றார் அது சர்ப்பமாயிற்று, பின்பு உன் கையை உன் மடியிலே போடு என்றார். அவன் தன் கையைத் தன் மடியிலே போட்டு, அதை வெளியே எடுக்கும்போது, இதோ, அவன் கை உறைந்த மழையைப்போல வெண்குஷ்டம் பிடித்திருந்தது. திரும்பவும் மடியிலே போடும்போது மற்ற கையைப்போலானது, நதியின் தண்ணீரை மொண்டு நிலத்தில் ஊற்று என்றார்.

ஊற்றும்போது தண்ணீர் வெட்டாந்தரையிலே இரத்தமாயிற்று இந்த மூன்று அற்புதங்களையும் பார்வோனுக்கு முன்பாக செய் என்று சொல்லி அனுப்பினார். அவன் போய் ஆரோனிடத்தில் கர்த்தர் தனக்கு கட்டளையிட்ட சகல அடையாளங்களையும் தெரிவித்தான். பின்பு இருவரும் இஸ்ரவேல் புத்திரரின் மூப்பர் எல்லாரையும் கூடிவரச் செய்தார்கள். "கர்த்தர் மோசேக்குச் சொல்லிய சகல வார்த்தைகளையும் ஆரோன் சொல்லி, ஜனங்களின் கண்களுக்கு முன்பாக அந்த அடையாளங்களையும் செய்தான். ஜனங்கள் விசுவாசித்தார்கள்; கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைச் சந்தித்தார் என்றும், அவர்கள் படும் உபத்திரவங்களைக் கண்ணோக்கிப்பார்த்தார் என்றும், அவர்கள் கேட்டபொழுது, தலைகுனிந்து தொழுதுகொண்டார்கள்" (யாத்.4:30,31). மோசேயினிடத்தில் காணப்பட்ட அற்புதமான செயல்களைக் கண்ட இஸ்ரவேலர் தேவனை விசுவாசித்து தொழுதுகொண்டார்கள் என்று பார்த்தோம். ஆனால் நாசரேத் ஊரில் வளர்ந்து தேவனுடைய உபதேசத்தை ஜனங்களுக்கு எடுத்துச்சொல்லி ஜனங்கள் மத்தியில் பிணியாளிகளை சுகமாக்கி அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்து கொண்டு வந்த இயேசுவை அந்த ஊரார் விசுவாசிக்காமல் இவன் தச்சன் அல்லவா, யாக்கோபு யோசே இவன் சகோதரர் அல்லவா? என்று சொல்லி இடறிப்போனார்கள். "பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" (எபி.1:1,2). அந்த அன்பின் ஆண்டவர் இயேசுவை நாசரேத்து மக்களில் அநேகர், அறியாமல் அவிசுவாசிகளானார்கள்.

யோவான் 9:39-ல் சொல்லப்பட்டபடி "காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன்" என்ற வசனத்தின்படி இன்றும் காணாதவர்கள் காண்கிறார்கள். அன்று இயேசுவை தன் கண்களாலே பார்த்து, அவரோடு உண்டு, உறங்கின தோமா, இயேசுவின் உயித்தெழுந்த செய்தியை சொன்ன சீஷர்களை நம்பாமல்: "அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்தில் என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றான். அந்த தோமாவை கர்த்தர் சந்தித்து; "நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். ...பின்பு தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்" (யோவா.20:27-29). ஆம், காணததை நம்புவதே நம்பிக்கை. "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" என எபிரெய ஆசான்

குறிப்பிடுகிறார் (எபி.11:1). நாம் இயேசுவை பாக்கவில்லை. ஆனாலும் அவர் நமக்காக மரித்தார் என விசுவாசிக்கிறோம். இயேசு செய்த அநேக அற்புதங்களை கண்ட பட்டணங்களில் சிலவற்றைக்குறித்து நாம் இப்படியாக படிக்கிறோம். "கோராசினே! உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள். நியாயத்தீர்ப்புநாளிலே உங்களுக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும். நியாயத்தீர்ப்புநாளிலே உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்.11:21-24). இவ்வளவு அற்புதங்களையும் கண்களாலே பார்த்த இந்த நாட்டு ஜனங்கள் விசுவாசியாமலும், மனந்திரும்பாமலும் பழைய வாழ்க்கையிலே நிலைத்திருந்தார்கள். ஆகையால், கர்த்தர் இத்தனை அற்புதங்களையும் கண்ட பட்டணங்களைப் பார்த்து, உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், நியாயத்தீர்ப்பு நாளிலே தீருவுக்கும், சீதோனுக்கும், சோதோமிற்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும் என்றார்.

கர்த்தருடைய வார்த்தையை கேட்டு மனந்திரும்பாமல் பாவத்திலே நிலைத்திருந்தால் என்னநடக்குமென்று மேற்கண்ட வசனத்திலே தியானித்தோம். நீங்கள் தேவ கோபாக்கினைக்கு தப்பிக்கொள்ள, இன்றே கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுங்கள். அவர் உங்களை அற்புதவிதமாக சிருஷ்டித்திருக்கிறார். அவர் உங்களுக்காக ஏற்படுத்தியுள்ள ஒவ்வொன்றும் அற்புதவிதமானதே. இயேசு தேவனுடைய குமாரன் என்பதை அறிந்துகொள்ளவும், அவரை விசுவாசித்து நித்திய ஜீவனைப்பெற்றுக்கொள்ளவும் ஆண்டவர் அற்புதங்களைச் செய்தார். "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" என்று யோவான் மிகத் தெளிவாக வெளிப்படுத்துகிறார் (யோவா.20:30,31). அற்புதர் இயேசுவை உங்கள் இருதயத்தில் விசுவாசித்து அளவில்லா ஆசீர்வாதம் பெறுங்கள்.

**இன்றைக்கும் அநேகர் அவிசுவாசிகளாகிப்போவதற்கு என்ன காரணம்?**

பல காரணங்கள் உண்டு. கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமை, பிசாசுக்கு இடங்கொடுப்பது, தீய காரியங்களைக்குறித்துபேசுவது, நம்பிக்கையற்று

வாழ்வது போன்ற அநேக காரணங்களை சொல்லலாம். இதற்கு கர்த்தருடைய பதில்: "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது" என்கிறார் (மத்.11:25,26). ஞானிகள் தங்களுடைய ஞானத்தினால் வஞ்சிக்கப்படுகிறார்கள். பாலகர் வாயில் துதி உண்டாகும்படி செய்கிறார். "எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும்" அப்பொழுது அவர்களுடைய அறியாமை அகற்றப்படும். நீங்கள் ஒரு அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிருங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**ஜெபியுங்கள்**




- கடலோர மாவட்டங்களில் நடைபெறும் ஊழியங்களுக்காக...
- மலைப்பிரதேசங்களில் நடைபெறும் ஊழியங்களுக்காக...
- வானொலி, தொலைகாட்சி மற்றும் மாதஇதழ், ஊழியங்களுக்காக...
- மாவட்டங்கள் தோறும் ஊழியங்கள் பெருகி சபைகள் கட்டப்பட...
- தபால் வழி தொடர்ங்கள் சிறப்புடன் நடைபெற...

## நடப்புச் செய்திகள்

1. திரிபுரா மாநில ஆளுநர் டி.ஒய்.பாட்டீல் தனக்குக் கொடுக்கப்படும் மாத சம்பள தொகை ரூ.1.1 லட்சத்துக்குப் பதிலாக வெறும் ரூ.1மட்டுமே பெற்றுக்கொள்ளப்போவதாக அறிவித்துள்ளார்.
2. சவுதி அரேபிய அரசு புதிய திட்டம் இந்திய ஊழியருக்கு நிரந்தர குடியுரிமை.
3. கலைஞர் காப்பீட்டு திட்டத்தில் 3கோடிக்கும் மேற்பட்டவர்கள் சேர்ந்திருப்பதாக அமைச்சர் பன்னீர் செல்வம் கூறியுள்ளார்.
4. போலீஸ் நிலையங்களில் பொதுமக்கள் கொடுக்கும் எல்லா புகார்கள் மீதும் எப்.ஐ.ஆர் பதிவு செய்து விசாரணை நடத்த வேண்டும் என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
5. பால் உற்பத்தியில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக இந்தியா முதலிடத்தில் இருந்து வருகிறது. இந்த தகவலை தேசிய பால் பண்ணை மேம்பாட்டு அமைப்பு வெளியிட்டுள்ளது.

# அஸ்திபாரம் ஏன் மிக முக்கியமானதாயிருக்கிறது?
## WHY THE FOUNDATION IS IMPORTANT?

*J.C.Choate*



வெளிப்படையான இவ்வுலகில், ஒரு வீட்டைக் கட்ட, ஒரு மாடிவீட்டைக்கட்ட அல்லது அதிக நாட்கள் நிலைத்திருக்க வேண்டுமென எதிர்பார்த்த ஏதோ ஒன்றினைக் கட்ட முற்படும் போது, இது ஒரு சரியான அஸ்திபாரத்தின் மேல் கட்டப்படுவது அவசியம் என நாம் அறிகிறோம். நம்முடைய வேலையில் அல்லது உத்தியோகத்தில் வெற்றியடையும்படிக்கு கல்விக்கான அல்லது பயிற்சிக்கான போதுமான பணத்தைப் பெறுவதின் மூலம் போதுமான ஆயத்தம் அவசியம் என நாம் உண்மையிலேயே விழிப்புடையவர்களாய் இருக்கிறோம். நாம் அஸ்திபாரத்தையோ அல்லது எதிர்காலத்திற்கான ஆயத்தத்தைப் பற்றிய முக்கியத்துவத்தையோ நாம் அலட்சியம் செய்யும்போது, சில துரதிஷ்டத்திற்குள்ளாகிறோம்.

நம்முடைய கர்த்தர் ஒரு சிறந்த ஆவிக்குரிய அஸ்திபாரத்திற்கான அவசியத்தை, கன்மலையின் மேல் தன் வீட்டைக்கட்டின, மற்றும் மணலின் மேல் தன் வீட்டைக்கட்டின இருவருக்கு ஒப்பிட்டுக் கூறுவதின் மூலம் விளக்கினார் இயேசு, "ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான், பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்" (மத்.7:24-27).

தொடர்ச்சியான விளக்கத்தில் இயேசு, இந்த பூமிக்குரிய வீட்டைக் கட்டினவர்களில் ஒருவன் புத்தியுள்ள மனிதன் என்றும் இன்னொருவன், புத்தியில்லாத மனிதன் என்றும் போதிக்கிறார். அவர் சொல்லியபடி புத்தியுள்ள, ஆவிக்குரிய வீட்டைக்கட்டினவன் கிறிஸ்து சொல்லுவதைக் கேட்டு அதின்படி

செய்கிறவனாய் இருக்கிறான் என காண்பிக்கிறார். அவன் ஒரு புத்தியுள்ள கட்டடக் கலைஞன் ஏனென்றால் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதன் மூலம் அவன் கிறிஸ்துவின் மேல் கட்டுகிறான். அவன் கிறிஸ்துவினிடத்திற்கு வரும்வரைக்கும் பழைய பழக்கவழக்கங்களையும், பாரம்பரியங்களையும், உலகக்காரியங்களையும், மனுஷருடைய சமயப் போதனைகளையும் தோண்டிபுதைத்து, அவருடைய போதனைகளுக்கும், அவருடைய வழியினிடத்திற்கும் திரும்பி, அங்கே கட்டுகிறான். அதன் விளைவாக, அவன் அசையாத அஸ்திபாரத்தின் மேலிருக்கிறான். அவன் சத்தியத்தை உடையவனாயிருக்கிறான், அவன் கிறிஸ்துவை உடையவனாயிருக்கிறான். அவன் ஒரு கிறிஸ்தவனாயிருக்கிறான். அவன் கர்த்தருடைய சபை அங்கத்தினனாயிருக்கிறான். அவனை ஒன்றும் அசைக்கமுடியாது. அவன் கற்றுக்கொண்ட ஒன்றை விட்டுவிடாமல் உறுதியாகப் பற்றிக்கொண்டவனாயிருக்கிறான். அவன் நித்திய ஜீவனைக் குறித்த நம்பிக்கையுடையவனாயிருக்கிறான்.

இயேசு பேசுகிற இன்னொரு மனுஷன் ஒரு புத்தியில்லாத கட்டடக்கலைஞன். அவனும் கிறிஸ்துவினுடைய போதனைகளைக் கேட்கிறான் ஆனால் அதற்குக் கீழ்ப்படிய தவறிவிடுகிறான். ஒருவேளை இவன் நம்பிக்கையற்றவனாயிருக்கலாம். அவன் அதிகமான சமயம் உண்டு என நினைத்திருக்கலாம். அவன் தான் தேவையான அளவு நல்லவன் என காரணம் காட்டியிருக்கலாம். அல்லது அவன் மனுஷருடைய போதனைகளுக்குப் பின் செல்லுகிறவனாயிருந்திருப்பான். என்ன பிரச்சனையாயிருந்தாலும் அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படிய தவறுகிறான் என்பது தான் உண்மை, ஆனபடியினால், அவன் முடிவிலே கட்டின கட்டடம் நிலைபெறாது. அவன் இழந்தவனாகவும் நித்திய அழிவைப் பெற்றவனாகவுமிருப்பான்.

நீண்ட நாட்களுக்கு முன்பாக அந்நாளில் சீயோனிலே கர்த்தர் அஸ்திபாரமிடுவார் என ஏசாயா சுட்டிக் காண்பிக்கிறார். அந்த அஸ்திபாரம் கிறிஸ்து ஆகும் என்றும் அது எருசலேமிலே ஸ்தாபிக்கப்படும் என்றும் கூறுகிறார். நாம் இந்த தீர்க்கதரிசன வசனத்தை வாசிப்போமாக. ஏசாயா, "ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது; இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும்; விசுவாசிக்கிறவன் பதறான்" (ஏசா.28:16) என்று சொன்னான். தயைகூர்ந்து அஸ்திபாரத்தைக் குறித்ததான இவ்விளக்கத்தை கவனியுங்கள். இது ஒரு கல்லாயிருக்கும், ஒரு பரீட்சிக்கப்பட்ட கல்லாயிருக்கும், ஒரு விலையேறப்பட்ட மூலைக்கல்லாயிருக்கும், மேலும் ஒரு திட அஸ்திபாரமுள்ள கல்லாயிருக்கும். வர்ணிக்கப்பட்டுள்ள இந்த வார்த்தையை பின்னர் நாம் புதிய ஏற்பாட்டில், இவையெல்லாம் இயேசு கிறிஸ்துவைக் குறிப்பிடுகிறதாக காண்போம். ஆனால் சங்கீதக்காரனாகிய தாவீது சங்கீதம்

118:22,23-ல் பாடிய போது, "வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது" என்று இந்த அஸ்திபாரத்தைச் சுட்டிக்காட்டினார். நாமும்கூட புதிய ஏற்பாட்டில் இந்த தீர்க்கதரிசன வசனம் கிறிஸ்துவில் நிறைவேறினதாகக் காண்கிறோம்.

நாம் இயேசுவின் நாட்களுக்கு திரும்புகையில், இயேசு அவர்களை நோக்கி; வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? இதை மத்தேயு21:42-ல் வாசிக்கிறோம். லூக்கா20:17,18-ல் இயேசு பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் பேசுகையில், ".....வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தின் கருத்தென்ன? அந்தக் கல்லின்மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப் போவான், அது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்றார்". நேரிடையான ஒரு கல் அல்லது ஒரு கற்பாறையானது அஸ்திபாரத்திற்குப் பயன்படக்கூடியவையாயிருக்கிறது ஆனால் ஒருவன் அதில் தடுமாறி விழுந்தாலும் அல்லது அது அவன்மேல் விழுந்தாலும் அவன் நசுக்கப்படுவான் அல்லது கொல்லப்படுவான். அதைப்போல, அந்தக் கல் ஒருவன் மேல் விழுந்தால் அது அவனை அழித்துப்போடும். இன்னொரு வார்த்தையில், சரியானமுறையில் பயன்படுத்தும் போது அது ஆசீர்வாதமாயிருக்கும். ஆனால் அதை அசட்டை செய்யும்போது அல்லது தவறாக பயன்படுத்தும்போது அது அழிக்கக்கூடிய சக்தியாக இருக்கும். ஆவிக்குரிய கன்மலையாகிய, கிறிஸ்துவோடு ஒப்பிடும்போதும் இதுவே உண்மையாயிருக்கிறது.

அப்போஸ்தலர் புத்தகத்திற்குத் தொடர்ந்து செல்கையில், பேதுரு சொஸ்தமாக்கப்பட்டிருந்த ஒரு மனிதனைப்பற்றி பிரதான ஆசாரியர்களிடத்தும், தேவாலயத்துச் சேனைத்தலைவனிடத்தும் சதுசேயரிடத்தும் பேசுகிறதைக் காண்கிறோம். அவன், "உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கடவது. வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்" (அப்.4:10-12). பவுல் இஸ்ரவேல் அல்லது

யூதர்களைக் குறித்து, "நீதிப்பிரமாணத்தைத்தேடின இஸ்ரவேலரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை. என்னத்தினாலென்றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடைவில்லை, இடறுதற்கான கல்லில் இடறினார்கள். இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று" (ரோம.9:31-33) இங்கே, நிச்சயமாக, பவுல் ஏசாயா 28:16 லிருந்து எடுத்துக்காட்டுகிறான்.

ஆனால் யார் அந்த கன்மலை அல்லது அஸ்திபாரம்? பவுல், "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" (1கொரி.3:11) என்றும் 1கொரிந்தியர் 10:3,4-ல் பவுல் மோசே காலத்து இஸ்ரவேலரைக் குறித்து, "எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே" என்றும் சொன்னான்.

எபேசு சபை கிறிஸ்தவர்களிடம் பேசுகையில், பவுல் "ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்;அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது;அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்" (எபே.2:19-22) என்றான். இங்கே அப்போஸ்தலன் சபையாகிய தேவனுடைய குடும்பம் அல்லது தேவனுடைய பண்ணையாயிருக்கின்ற கிறிஸ்தவர்களைக் குறித்து பேசி, சபை எவ்வாறு அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளின் உபதேசத்தினால் கட்டப்பட்டதென பேசிக்கொண்டிருக்கிறான். பொதுவான அஸ்திபாரம் மட்டும் முக்கியமல்ல, ஆனால் அஸ்திபாரத்தின் முக்கியமான பாகமே இதுதான், கிறிஸ்துவே அந்த அஸ்திபாரத்தின் பாகமென அவன் கூறினான். அந்த அஸ்திபாரமில்லாமல் பூமிக்குரிய அல்லது ஆவிக்குரிய வீடு நிலைத்திராது. மீண்டும் பவுல், "தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது" (1தீமோ.3:15).

தன்னுடைய காலத்து கிறிஸ்தவர்களிடம் அப்போஸ்தலனாகிய பேதுரு, "இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும்,

பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள். மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்பேல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள். அந்தப்படியே; இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது; கீழ்ப்படியாமலிக் கிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக் கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன் மலையுமாயிற்று. அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்" என்றான் (1பேது.2:8).

மீண்டும் ஏசாயா28:16-ல் எவ்வாறு கிறிஸ்து பிரதான மூலைக்கல்லாகி, சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இருந்தாரென இந்த எழுத்தர் காண்பிக்கின்றதை நம்மால் காணமுடிகிறது. யூதர்கள் மறுதலித்தவர்களாய் அஸ்திபாரத்தைக் குறித்துமட்டுமல்லாது அஸ்திபாரத்திற்கு மிக முக்கியமான பகுதியாகிய பிரதான மூலைக்கல்லைக் குறித்தும் இடறினார்கள். மேலும் பேதுரு, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிந்தவர்கள் எவ்வாறு ஆசீர்வதிக்கப்பட்டவர் களாகவும், அவரை மறுதலித்தவர்கள் எவ்வாறு இழந்து போவார்கள் எனவும் வெளிப்படுத்துகிறார்.

மத்தேயு 16:13-19-ல் கிறிஸ்து அப்போஸ்தலர்களிடம் உலகம் தம்மைக்குறித்து என்ன நினைக்கிறது என்பது பற்றி கேட்டார். அதற்கு அப்போஸ்தலர்கள் சிலர் அவரை ஒரு தீர்க்கதரிசி என்றும் வேறுசிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். ஆனால் கிறிஸ்து இதை எதிர்பார்க்கவில்லை. அவர் தம்முடைய சபையை இப்படிப்பட்ட விசுவாசமுள்ளவர்கள் மேல் கட்டவில்லை. பிறகு அவர் அப்போஸ்தலரை நோக்கி: நீங்கள் என்னைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள் எனக்கேட்டார். அவர்கள் அவர் தேவனுடைய குமாரன் என தாங்கள் விசுவாசிப்பதாக விளக்கினார்கள். அதன் விளைவாக கர்த்தர் அதன்பின் தம்மை அவர்கள் தேவனுடைய குமாரன் என விசுவாசித்தார்கள் என்ற அந்த அறிக்கையின் மேல் தம்முடைய சபையைக் கட்டப்போவதாகச் சொல்லி பதிலளித்தார். அப்போஸ்தலர் 2-ல் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கம்பண்ணினார்கள், மூவாயிரம் ஆத்துமாக்கள்

கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள். அவர்களை அவர் இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்தார். ஆனால் அவர் எதன் மேல் சபையைக் கட்டினார்? சபை கிறிஸ்துமேல் கட்டப்பட்டது; அதாவது அவர் தேவனுடைய குமாரனாயிருந்தார் என்ற அந்த சத்தியத்தின் மேல் கட்டினார். இது மாத்திரமல்ல, ஆனால் சபை தொடர்ந்து, நமது ஜீவியம் பரியந்தமும் முடிய அந்த சத்தியத்தின் மேல் இளைப்பாறுகிறது. கிறிஸ்து தேவனுடைய குமாரன் அல்ல என்று கடந்த காலங்களில் நிரூபிக்கப்பட்டிருக்குமானால், பிறகு சபையானது பல நாட்களுக்கு முன்பாகவே வீழ்ந்துபோயிருக்கும் அல்லது நிலை நிற்காமல் போயிருக்கும். ஆனால் சபை தொடர்ந்து நிலைத்திருக்கிறது, கிறிஸ்துவே கன்மலையாகி, பிரதான மூலைக்கல்லாகி குமாரன் என்ற சத்தியத்தின் மேல் அஸ்திபாரமிட்டிருப்பதே அது நிலைத்திருப்பதற்கான ஒரே வழியாயிருக்கிறது. பவுல் சொல்லியபடி, அவரே உறுதியான அஸ்திபாரமாயிருக்கிறார்.

என்னுடைய நண்பரே, நீங்கள் எதனை கட்டிக்கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் அவர் சொல்லுகிறதைக் கேட்டு, அதன்படி செய்தால், நீங்களும் கிறிஸ்துவின் மேல் கட்டமுடியும். நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தால், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவில் கொண்டுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, உங்கள் பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டால், கர்த்தர் உங்களை இரட்சித்து உங்களை கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்டுள்ள சபையில் சேர்த்துக் கொள்வார் (அப்.2). நீங்கள் ஞானவானாயிருப்பீரென்றால், இதைச் செய்யுங்கள். நீங்கள் அவ்வாறிருக்க நாங்கள் ஜெபிக்கிறோம்.

**புகை நமக்குப் பகை**

**மாசில்லா சமுதாயம் படைப்போம்**

## பொது அறிவுச் சோதனை

1. இந்தியாவில் முதன் முதலில் மின்சார ரெயில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது?
   அ)1935 ஆ)1955 இ)1925
2. அமைதியின் மனிதர் என்று அழைக்கப்பட்ட இந்திய தலைவர் யார்?
   அ)ஜவஹர்லால்நேரு ஆ)மகாத்மாகாந்தி இ)காமராஜ்
3. முதன் முறையாக விண்வெளியில் இருந்து உலகை வண்ணப்படம் பிடித்தனுப்பிய செயற்கைகோள் எது?
   அ)சோயுஸ்-டி.எம்.13 ஆ)டைரோஸ்-1 இ)கொலம்பியா
4. அரபிக்கடலின் அரசி என்று அழைக்கப்படும் இடம் எது?
   அ)கொச்சி ஆ) கன்னியாகுமரி இ)மும்பை
5. புற்றுநோயை குணப்படுத்துவது எது?
   அ) சோடியம் - 24 ஆ) கோபால்ட்-60 இ)கார்பன் - 14

**விடைகள்:**
1.1925
2. மகாத்மாகாந்தி
3. சோயுஸ்.டி.எம்.13
4. கொச்சி
5. கோபால்ட்-60

# நீங்கள் உயர்த்தப்படவேண்டுமா?
# Should You Be Exalted?



*J.Glory Arjunan*

அன்பான சகோதரிகளே இப்புத்தாண்டில் புதுப்பொழிவுடன் இருப்பீர்கள் என்று நம்புகிறேன். கர்த்தர் இவ்வருடத்தை நமக்கு கூட்டிவழங்கியுள்ளார். இவ்வருடத்தில் நீங்கள் உயர்த்தப்பட வேண்டுமா? அப்படியானால் ஒன்று செய்யுங்கள் "மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையுள்ளவர்களாக எண்ணக்கடவீர்கள்" (பிலி.2:3) என்ற அன்பின் கட்டளையை நம் முன் வைக்கிறது பரிசுத்தவேதாகமம். இக்கட்டளையானது கைக்கொள்ளுவதற்குச் சற்றுக்கடினமாயிருக்கலாம். வீட்டிலும் சரி, வேலைபார்க்கும் இடங்களிலும் சரி, ஆவிக்குரிய உலகிலும் சரி, எங்குபார்த்தாலும் 'பெருமை' மனமேட்டிமை, அகந்தை போன்ற ஆகாத பிசாசின் குணங்கள் தலைவிரித்தாடுகிறது. கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் நமக்கு இக்குணங்களைக் கொண்ட ஜனங்கள் மத்தியில் வாழ்வது சிலவேளைகளில் மிகக்கடினமாக இருக்கலாம். கிறிஸ்துவை அறியாத, அல்லது ஏற்றுக்கொள்ளாத மற்றவர்களைக் குறித்து, ஆதியும் அந்தமுமானவர் சொல்லுகிறார்; "அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும் அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்....." (வெளி.22:11) எனக் கூறும் வேளையில், இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, தேவனுடைய குடும்பத்தில் பிறந்து, தேவனுடைய பிள்ளையாய் ஜீவிக்கிற நம்மைப் பார்த்து ".....நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்" (வெளி.22:11) எனக் கூறுகிறார். அன்பு சகோதரியே நாம் உயர்த்தப்படவேண்டுமானால் மற்றவர்களை மேன்மையுள்ளவர்களாக எண்ணுவோம்.

இன்று கிறிஸ்தவ வட்டாரங்களில் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட சில வாக்குத்தத்தங்களை பிடித்துக்கொண்டு கர்த்தர் என்னை வாலாக்காமல் தலையாக்குவார் கீழாக்காமல் மேலாக்குவார் என உரிமைபாராட்டி அநேக நேரங்களில் ஏமாற்றம் அடைகின்றனர். நிச்சயமாகவே தேவன் நம்மை இவ்விதமாய் உயர்த்த வல்லவர். ஆனபோதிலும் தேவனால் உயர்த்தப்பட வேண்டுமானால் இயேசுவின் அடிச்சுவடை பின்பற்றவேண்டியது அதிமுக்கியமானது. இயேசு நமக்கு மாதிரியை வைத்துச்சென்றார். நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவை நோக்கிப் பாருங்கள். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், .......அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே

தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி.... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலி.2:6-11). இயேசுவானவர் தம்மைத் தாமே தாழ்த்தினார் ஆதலால் தேவனால் உயர்த்தப்பட்டார். நீங்களும் நானும் எவ்வாறிருக்கிறோம்? சற்றே நம்மை நாமே நிதானித்து அறிவோம். மனமேட்டிமை, பெருமை, அகந்தை போன்றவைகள் நம்மிடம் காணப்படுகிறதா? அல்லது மனத்தாழ்மை நம்மில் உள்ளதா? இல்லையென்றால் நாம் தேவனுடைய பிள்ளைகள், இவ்வுலகத்தில் பிசாசின் பிள்ளைகளுக்குமுன் நாம் எப்படி தாழ்ந்து போவது என எண்ணுகிறீர்களா?

அண்டசராசரங்களை உண்டாக்கினவர் தேவனுடைய மடியிலிருந்தவர் தம்மை தாழ்த்த வில்லையா? தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்ற வசனத்தை நினைவுகூருவோம். மேலும் தேவனுடைய குமாரன் இழிவாய் நடத்தப்பட்டார், துப்பப்பட்டார், ஏளனம்செய்யப்பட்டார். அவரை உயர்த்தின தேவன் அவருடைய பலத்த கைக்குள் அடிங்கியிருப்போமானால் நம்மையும் உயர்த்துவார். இல்லை இது Prestige Issue. என்னால் விட்டுக்கொடுக்கமுடியாதென்றால், நாம் மிகுந்த வேதனைப்படவேண்டியிருக்கும். நாம் பிடிவாதமாய் இருக்கும்போது வெற்றியைப்பெறுவது கூடாத காரியம். ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள் (பிலி.2:3). சிலவேளைகளில் நம்முடைய கிறிஸ்தவ ஓட்டத்தில் பிரச்சனைகள் வரலாம். நம்முடைய பக்தியின் ஜீவியத்தையும், உண்மையான நடக்கையினையும் உலகத்தார் பார்த்து பொறுக்கக் கூடாமல் பொறாமை கொண்டு நம்மை குற்றப்படுத்திக் கொண்டேயிருக்கலாம். அப்பொழுது நம்மால் மனத்தாழ்மையுடன் நடந்துகொள்ளமுடியாமல் நம்முடைய கோபத்தினை வெளிப்படுத்திவிடுவோம். ஆனால் நாமோ கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாக நம்முடைய ஆவியை அடக்குகிறவர்களாக இருக்கவேண்டும். தேவனுடைய வசனங்களை நினைவு கூர்ந்து இயேசு வார்த்தையினாலே பிசாசை ஜெயித்ததுபோல நாமும் தேவவசனங்களால் பிசாசின் கிரியைகளை மேற்கொள்ளவேண்டும். நம்மை இவ்வுலகம் வேதனைப்படுத்தும்போது, இயேசுவையும் வேதனைப்படுத்தியது என்பதை நினைத்து பொறுமையோடிருப்போம்.

வேதபாரகர், பிரதான ஆசாரியர், சதுசேயர், பரிசேயர் அனைவரும் இயேசுவை குற்றப்படுத்தும்படியே வகைதேடினார்கள். சிலுவையின் கடைசிபரியந்தமும் ஏளனம் செய்தனர். "மற்றவர்களை ரட்சித்தான், தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை, இவன் இஸ்ரவேலின் ராஜாவனால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம், தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன் மேல்

நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்" (மத்.27:42-43) ஆனால் இயேசுவோ, "…..பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்…." (லூக்.23:34) முடிவில் என்னநடந்தது? "….தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,……. எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைத் அவருக்குத் தந்தருளினார் (பிலி.2:9-11). சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி.2:8) தேவனால் உயர்த்தப்பட்டார்.

அன்பு சகோதரியே, கிறிஸ்துவின் சிந்தை நம்மில் இருக்குமானால், கிறிஸ்துவினிமித்தம் மனத்தாழ்மையாயிருப்போமானால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருப்போமானால், மேலும் அவருடைய பலத்தகைக்குள் அடிங்கியிருப்போமானால், நாமும் உயர்த்தப்படுவோம். ஆவிக்குரிய பெருமை மற்றும் சரீரத்திற்குரிய பெருமைகளை இப்புத்தாண்டில் நம்மைவிட்டு அகற்றுவோம். "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (யாக்.4:10).

### வாசகர் மற்றும் வேத அறிவுப்போட்டியாளர் கவனத்திற்கு

நீங்கள் ஒவ்வொரு முறையும் கடிதம் எழுதும்போது உங்களுடைய பதிவு எண்ணை எங்களுக்கு எழுதிதெரியப்படுத்துங்கள். அது எங்களுக்கு மிகவும் பிரயோஜனமாயிருக்கும். முகவரி மாறும்போது புதிய முகவரியையும் பழைய முகவரியையும் பதிவு எண்ணுடன் எழுதவும்.

ஆசிரியர்.

### வேதஅறிவுப்போட்டி எண் 112-ல் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| Sis.ஜாய் வாசுகி | -கோவை |
| Mr.ஆனந்த் | -மதுரை |
| Tmt. மரகதம் திரவியம் | -கோம்பை |
| K.மோகன் | -கொமாரபாளையம் |
| Mrs.மெர்ஸி டக்லஸ் | -கோவை |
| K.விமலா | -கல்வெட்டுப்பாளையம் |
| பெயர் எழுத விரும்பாதவர் அல்லது எழுத மறந்தவர் | |
| குளோரிஃபுல்சர் | -சென்னை |

**சாலை விதிகளை மதிப்போம்**

### மணமகன் தேவை

1. 31வயதுள்ள பெங்களூரில் செவிலியர் வேலை செய்யும் பெண்ணுக்கு தொடர்பு: சகோ.லெஸ்லி லாரன்ஸ், ஊழியர் பெங்களூர் -0998643098.
2. 25 வயதுள்ள பி.காம்., தனியாரில் பணிபுரியம் மணமகள் தொடர்பு சகோ. செங்கோல் ராயன், ஊழியர் பாண்டிச்சேரி -9285500883.

"இந்தக்காரியம் கர்த்தரால் வந்தது" ஆதி.24:50

### மணமகள் தேவை

1. 30வயதுள்ள எம். ஏ., படித்த ஊழியருக்கு தொடர்பு: சகோ. பிரான்ஸிஸ் டேவிட், புதுடில்லி - 09810763321.
2. 30 வயதுள்ள +2 படித்த தனியாரில் பணிபுரியும் மணமகனுக்கு தொர்பு சகோ.சுந்தர்ராஜ், ஊழியர் வண்ணாரப் பேட்டை சென்னை -9840847635.

மேலும் தொர்புக்கு:
**S.David Martin - 98404 25080**

# எச்சரிப்பு

**G. Vellusamy**



பிதாவாகிய தேவனுக்கு ஆண்டவர் இயேசுவின் மூலம் துதிகன மகிமை உண்டாவதாக! கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே நான் தேவனுடைய கிருபையால் எச்சரிப்பு என்ற தலைப்பின் கீழாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். தேவன் வானத்தையும் பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின பிறகு கடைசியாக மனிதனை உண்டாக்கினார். இந்த பூமியில் முதல் மனிதனாகிய ஆதாமுக்கு தேவன் எச்சரித்த வார்த்தையானது (ஆதி. 2:16,17) நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனால் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப்புசிக்க வேண்டாம். அப்படி புசித்தால் சாகவே சாவாய் என்று தேவன் எச்சரித்தார். ஆனால் ஆதாம் தேவனுடைய வார்த்தையை மீறி பிசாசின் வார்த்தைக்கு கீழ்படிந்து ஏவாளின் நிமித்தம் கனியை சாப்பிட்டான். அதன்பிறகு தேவன் மிகவும் அழகு வாய்ந்த ஏதேன் தோட்டத்தை விட்டு விரட்டினார் அதுமட்டுமல்லாமல் உன் நிமித்தம் இந்த பூமி சபிக்கப்பட்டது என்றும் நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்ததோடே அதின் பலனை புசிப்பாய் என்றும் தேவன் எச்சரித்தார் என்று வேதத்தில் மிகவும் தெளிவாக பார்க்கிறோம்.

நோவாவின் காலத்திலே வாழ்ந்த மக்கள் தேவனுக்கு விரோதமாக பாவங்கள், அக்கிரமங்கள் செய்ததால் தேவன் முதன் முறையாக உலகத்தை (அ) பூமியை அழிக்க முடிவெடுத்தார். அதன் பிறகு நோவாவின் காலத்து மக்களுக்கு 40 நாள் மழைபெய்து தண்ணீரினால் பூமியை அழிப்பேன் என்று எச்சரித்தார் அவர்களோ கீழ்ப்படியாமலும் நோவாவை கேலி செய்து நகைத்தார்கள் (ஆதி: 6:5, 6,13) தேவன் வசனத்தில் சொன்னது போல் 40 நாள் மழை பெய்து பூமி அழிந்தது என்று பார்க்கிறோம்.

சோதோம் பட்டணத்தில் அக்கிரமங்கள் பெருகினபடியால் அழிப்பதற்கு தேவன் தூதரை அனுப்பினார். அங்கு தேவன் தூதர் மூலம் லோத்தின் குடும்பத்திற்கு எச்சரித்தது என்னவென்றால் உனது உறவினர்களை கூப்பிட்டு கொண்டு உன் ஜீவன் தப்ப ஓடிப்போ பின்னிட்டுப்பாராதே இந்த சமபூமியில் நில்லாதே மலைக்கு ஓடிப்போ என்றார் ஆனால் அங்கு என்ன நடந்தது லோத்தின் மனைவி திரும்பி பார்த்ததினால் அங்கு உப்புத்தூணாக மாறினாள் என்று (ஆதி 19:17, 26) பார்க்கிறோம். இப்படியாக பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் அநேக

எச்சரிப்புகளை பார்க்கிறோம். புதிய ஏற்பாட்டில் அநேக எச்சரிப்பு இருந்தாலும் அதிலே ஒன்று மட்டும் பார்ப்போம். பொருளாசையைக் குறித்து (லூக்கா 12:15-21) வசனத்தில் பார்க்கும்போது இன்றைக்கு மனிதர்கள் இரவு பகலாக கண்விழித்து பணம், பொருள், ஆஸ்திகள் போன்றவைகளை சம்பாதிக்க கூடிய மனிதர்களாக தான் இருக்கிறார்கள்.

நாம் லூக்கா புத்தகத்திலே வாசிக்கும்போது இயேசு கிறிஸ்து ஒரு உவமையை சொல்லும் போது ஒருவன் தன் நிலம் நன்றாய் விளைந்ததை பார்த்து நான் என்ன செய்வேன் தானியங்களைச் சேர்த்து வைக்க இடமில்லையே என்று புலம்பி களஞ்சியங்களை இடித்து பெரிதாக கட்டி விளைந்த தானியங்களை சேர்த்து வைத்து என் ஆத்துமாவே உனக்காக அநேக வருஷங்களுக்கு அதிகமான பொருள் சேர்த்துவைக்கபட்டிருக்கிறது. நீ இளைப்பாறி புசித்து குடித்து பூரிப்பாயிரு என்று தன் ஆத்துமாவிலே சிந்தித்து கொண்டு இருந்தான் ஆனால் தேவனோ அவனுக்கு ஒரு எச்சரிப்பாக, மதிகேடனே உன் ஆத்துமா இன்று இராத்தியிலே உன்னிடத்தில் இருந்து எடுத்துகொள்ளப்படும் அப்போது நீ சேகரித்தவை யாருடையதாகும் என்று கேட்கிறதை பார்க்கிறோம்.

ஆம் பிரியமானவர்களே, இந்த பூமியில் மனிதர்கள் இப்படியாக தான் சரீர பிரகாரமாக தான் உயர்ந்தவனாகவும், பலர் மதிக்கக்கூடிய மனிதனாகவும் செல்வங்கள் அதிகமாக மிகுந்தவனாகவும் வாழவேண்டும் என்று சிந்தித்து கொண்டு செயல்படுகிறான் என்று பார்க்கிறோம். அதேபோல் தான் இயேசுவினிடத்தில் ஒருவன் வந்து நல்லபோதகரே நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு இயேசு நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன் தேவன் ஒருவரை தவிர மற்றொருவன் நல்லவன் இல்லையே என்றுகூறி மேலும் மாற்கு 10:9-ம் வசனத்தில் பார்க்கும்போது நீ கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்று கேட்டார் அவனோ இவைகளையெல்லாம் என் சிறு வயது முதற்கொண்டு கடைபிடித்துக்கொண்டு வருகிறேன் என்றான் மேலும் இயேசு உன்னிடத்தில் ஒருகுறை உண்டு நீபோய் உன் ஆஸ்திகளை எல்லாம் விற்று தரித்திரருக்கு கொடு என்றார் அப்போது பரலோகத்தில் உனக்கு பொக்கிஷம் உண்டாகும் என்றார். அவனோ மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் மனமடிந்து திரும்பிபோனான் என்று மாற்கு 10:20-22 வரை பார்க்கிறோம். அப்படி பொருள் மீது அல்லது பணத்தின் மீது ஆசையுள்ளவர்களை பார்த்து தான் எச்சரிக்கையாய் இருங்கள் என்று தேவன் இப்போது உரைக்கிறார் என்று பார்க்கிறோம். அதேபோலதான் நமக்குதேவன் இந்த பூமியில் தொடர்ந்து எச்சரிப்பை கொடுத்துக்கொண்டு வருகிறார். கடந்த நாட்களிலே பல இடங்களில் உயிர்ச்சேதங்கள், பொருள்சேதங்கள் நடந்து வருகின்றன.இது நமக்கும் கூட ஒரு எச்சரிப்பு தான். அந்த செயல் நமது ஊர்களில் நடப்பதற்கு எவ்வளவு நேரம் ஆகிவிடும் அதேபோல தான் கடந்த 26-12-2004 அன்று

காலையில் இதுவரை கண்டிராத செயல் நடந்தது என்னவென்று தெரியுமா? சுனாமி தான் ஆம் பிரியமானவர்களே நாம் எதற்கு கடலோரங்களில் வீடுகட்டிக்கொண்டு வசித்து வருகிறோம். கடல்நீர் நிலத்தில் வராது என்ற நம்பிக்கை. அதுமட்டுமல்லாமல் நம்வாழ்வில் இதுவரை அதுபோல கடல்வரவில்லை என்ற நம்பிக்கை தான் ஆனால் பார்த்தீர்களா இந்தோனேஷியாவில் ஏற்பட்ட கடல்கொந்தளிப்பு நமக்கு ஒரு சிறு செயல் தான் அதற்கே எவ்வளவு உயிர்கள் போனது! அப்படியானால் இந்தோனிஷியாவில் எவ்வளவு உயிர்கள் போனது! இதெல்லாம் தேவன் நமக்கு தரும் எச்சரிப்புதான்.


அதுமட்டுமல்லாமல் இன்று உலகிலேயே மிகுந்த வல்லரசு நாடாக இருக்கும் அமெரிக்கா இதுவரை அவர்கள் காணாத அளவிற்கு கத்ரினா, ரீட்டா என்றதான பெறும் புயலை சந்தித்தது அங்கு பலர் இறந்தார்கள். அதே போல சீனாவில் பெல்புயல், பாகிஸ்தானில் முசரபாத் என்னும் இடத்தின் நிலநடுக்கம் அதிலே எவ்வளவு உயிர்கள் போனது, நமது நாட்டிலே காஷ்மீரில் நிலநடுக்கம் தமிழகமெங்கும் வரலாறு காணாத அளவிற்கு தொடர்மழையினால் பல வீடுகள், பல பாலங்கள், மனிதனின் உயிர்கள், மனிதனால் அசைக்கப்படாத பல அணைகள் உடைப்பு, ஏரிகள் உடைப்பு . இவைகளையெல்லாம் கண்டும், கேள்விப்பட்டும் நாம் நம் வாழ்வைக் குறித்து எச்சரிப்பு அடையவேண்டும். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது. நாம் இப்போது கடைசி காலங்களில் வாழ்ந்து வருகிறோம். இவர்களுக்கு எல்லாம் நேரிட்ட செயல் நமக்கும் நேரிடாது என்பதற்கு என்ன ஆதாரம்? இன்றோ அல்லது நாளையோ நமக்கும் நடக்கலாம். ஆகையால் கடைசியாக, எச்சரிப்பை பார்ப்போம் (அப்:17:30,31) அறியாமையுள்ள காலங்களில் தேவன் காணாதவர் போலிருந்தார் ஆனால் இப்போதோ எல்லோரும் மனந் திரும்பவேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார். ஆகவே மனந் திரும்பாமல் யாராவது இருந்தால் உடனே மனம்திரும்பும்படியாகவும் அப்படி மனந்திரும்பி கிறிஸ்துவுக்குள் வாழும் கிறிஸ்தவர்களுக்கு நியாயத்தீர்ப்பு ஒன்று இருக்கிறது. கிறிஸ்துவின் வருகை மிகவும் சமீபத்தில் இருக்கிறது. ஆகவே எல்லோரும் எல்லா செயல்களிலேயும் மிகவும் ஜாக்கிரதையாக இருப்போம் தேவனுக்கு முன்பாக இன்னும் அதிக பக்தியாக இருப்போம். தேவன் தாம் இன்றும் என்றும் நம் அனைவரோடும் சதாகாலங்களிலும் இருப்பாராக ஆமென்.

### *வேதஅறிவுப்போட்டி எண் 112-ன் விடைகள்*

| | | | |
|---|---|---|---|
| 1. சொந்த | -யாத்.19:5 | 6. பேதுரு | -1பேது.1:13 |
| 2. ஆசாரியராயிருக்க மாட்டார் | - எபி.8:4 | 7. தீரு | -சகரி.9:3 |
| 3. 70 | -ஆதி.46:27 | 8. சுவிசேஷம் | -1பேது.4:6 |
| 4. இரக்கம் | -யாக்.2:13 | 9. சங்காரம்பண்ணுவேன் | -செப்.1:6 |
| 5. ஏதோமியர் | -மல்.1:4 | 10. தேவ அன்பு | -1யோவா.2:5 |

# சத்திய வார்த்தையில் சரித்திரம்

John S.Nathan.
Gospel Minister



## மகா அலெக்சாண்டர் மாவீரன்

( Defender of men)

தோற்றம்: 20.9.356 B.C - மறைவு: 30.2.323 B.C.

தந்தை: 2ஆம்பிலிப்பு . மக்கெதொனியாவின் மன்னன்.

★எகிப்தை வென்ற உடனே அலெக்சாண்ரியா நகரை நிறுவினான்.

★உலகிலேயே முதன் முதலில் நாணயத்தில் தன் உருவத்தை பதித்த பெருமையுடையவன்.

★ கை, கால் வலிப்பு நோய் (Epileptic) உள்ளவன்.

★ வலது கண் நீல நிறமும், இடது கண் கறுப்பு நிறமும் உள்ளவன்.

★ இடது கை பழக்கமுள்ளவன், குள்ளமானவன்.

★ தனது 20-வது வயதில் மாசிடோனியாவின் மன்னனாக முடி சூட்டப்பட்டான்.

★ 13 வருட ஆட்சிகாலத்தில், கிரீஸ் முதல் எகிப்துவரைக்கும் மற்றும் இந்தியாவின் வடமேற்கு பகுதிவரை 3 கண்டங்களை ஆட்சி செய்தான்.

★ முப்பெரும் கண்டங்களை வெல்ல, ஐம்பெரும் படையை மேற்கொண்ட மகா அலெக்சாண்டரால் 22 நாட்களே வாழக்கூடிய கொசுவை வெல்ல முடியாமல் ; நாள் காய்சலுக்குப் (மலேரியா) பிறகு பாபிலோனில் 30.2.323-ல் மரணம் அடைந்தான் (அப்போது பெப்ரவரிக்கு 30 நாட்கள் இருந்தது).

★ சிறுவனாக இருந்தபோது ப்யுனி பேலஸ் என்ற முரட்டு அரேபிய குதிரையை அடக்கி சவாரிசெய்தவன்.

★ தனது ஆசானும், வழிகாட்டியுமான அரிஸ்டாட்டில் (Aristotle 427-347 B.C) அறிவுரையான, உலகை வென்றிட கிரேக்க கலாச்சாரத்தைப் பரப்பு என்ற கொள்கையை கடைபிடித்தவன். இறுதியாக தான் வென்ற இந்தியாவை மன்னன் புருஷோத்துமன் திரும்ப ஆண்டிட வழிவகுத்தவன்.

1. TOLEMY எகிப்தையும்

2. SELEUCUS கிழக்கு கிரீஸ் நகரையும்

3. CASSENER மசிடோனியாவையும்

தானியேல் 11:2,3 (கி.மு. 539 -ல் எழுதப்பட்ட தீர்க்கதரிசனத்தின்படி 300 ஆண்டுகளுக்குப் பிறகு கிரேக்கராஜ்யம் தனது பலத்தை சிறிது, சிறிதாக இழந்து கடைசியில் தன் வம்சத்தினர் யாருமே ஆட்சிசெலுத்தாமல் அழிந்தது). இவ்வாறாக சத்தியவார்த்தை நிறைவேறினது.

பகுதி -2- UNIT

# சிறுவர்களுக்காக...

## Especially For Kids



★ இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் - 1தெசலோனிக்கேயர் 5:17
Pray without ceasing - 1Thessalonians 5:17

★ பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள் - எபேசியர் 4:27
Neither give place to the devil - Ephesians 4:27

★ மாம்சசிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் - ரோமர் 8:6
For to be carnally minded is death: but to be spiritually minded is life and peace - Romans 8:6

★ சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்-யோவான் 8:32
And you shall know the truth, and the truth shall make you free - John 8:32

★ கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்: நான் தாழ்ச்சியடையேன் - சங்கீதம் 23:1
The Lord is my shepherd: I shall not want - Psalms 23:1

### கேள்வி - Question

1. மெத்தூசலாவின் வயது என்ன? அ)810 ஆ)1001 இ)969
How old was Methuselah ? A)810 B)1001 C)969
2. முதல் மனுஷியின் பெயர் என்ன? அ)ஏவாள் ஆ)தீனாள் இ)ரூத்
What is the Name of the first woman? A)Eve B)Diana C)Ruth
3. இயேசுவை காட்டிக்கொடுத்தவன் யார்? அ)சீமோன் ஆ)யூதாஸ்காரியோத்து இ)யூதா
Who betrayed Jesus? A)Simon B)Judas Icariot C)Jude
4. இஸ்ரவேலின் முதல் ராஜா யார்? அ)தாவீது ஆ) எசேக்கியா இ)சவுல்
Who was the first king of Israel? A)David B)Hezekiah C)Saul
5. பேதுருவின் பிரசங்கத்தை கேட்டு எத்தனை பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள்? அ)3000 ஆ)2000 இ)5000
How many souls were baptized when they heard the message of Peter? A)3000 B)2000 C)5000

### CHORUS

என் இயேசுவால் ஆகாததொன்றுண்டோ?
என் இயேசுவால் ஆகாததொன்றுண்டோ?
என் இயேசுவால் ஆகாதது. என் இயேசுவால் ஆகாதது.
என் இயேசுவால் ஆகாததொன்றுண்டோ?
என் இயேசுவால் ஆகாததொன்றில்லை!
என் இயேசுவால் ஆகாததொன்றில்லை!
என் இயேசுவால் ஆகாதது. என் இயேசுவால் ஆகாதது.
என் இயேசுவால் ஆகாததொன்றில்லை!

Is anything too hard for the Lord?
Is anything too hard for the Lord?
Is anything too hard is anything too hard?
Is anything too hard for the Lord?
No, nothing is too hard for the Lord!
No, nothing is too hard for the Lord!
No, nothing is too hard, no nothing is too hard!
No, nothing is too hard for the Lord!

கடந்த மாதம் கலந்து கொண்டவர்கள்
1. S.Janice Lydia
2. S.Esther Junila




சிறுவர் பகுதி

# தேறின வேதபாரகன்

***வேதவாசிப்பு: எஸ்றா 7:1-10***

இஸ்ரவேலிலே தேறின வேதபாரகனாக எஸ்றா இருந்தான். இவன் பிரதான ஆசாரியனான ஆரோனின் குமாரன். இன்றைக்கு பார்த்தீர்களென்றால் கிறிஸ்தவ ஊழியரின் மகன் மிகப் பெரிய பதவி வகிக்க வேண்டும் என்று முயற்சி எடுக்கிறார்கள். ஆனால் எஸ்றாவோ அப்படியில்லை தன் தகப்பனுடைய வழியிலேயே அவன் ஒரு சிறந்த வேதபாரகனாக இருக்கிறான். தேவனாகிய கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகனாயிருந்தான். இப்படி அவன் இருந்தபடியால் கர்த்தருடைய கரம் அவன்மேல் இருந்தது. அதுமட்டுமா?



அர்த்தசஸ்டா என்ற ராஜா அவன் கேட்டதை எல்லாம் கொடுத்தார். எப்படி அவன் கேட்டதை எல்லாம் கொடுத்திருப்பான். அந்த அளவுக்கு எஸ்றா. ராஜாவின் பார்வையில் மிக நல்லவனாகவும். கர்த்தருக்கு பயப்படுகிறவனாகவும் இருந்தபடியால் தேவன் ராஜாவின் கண்களில் கிருபை கிடைக்கும்படி செய்திருக்கிறார். நாம் ஆண்டவருக்கென்று ஊழியம் செய்யும்போது சகல ஜனங்களிலும் நமக்கு கிருபை கிடைக்கும்படி செய்வார். காரியங்களையும் கைகூடிவரச் செய்வார். இவையெல்லாம் நன்கு அறிந்த எஸ்றா சகலத்தையும் பெற்று அனுபவித்தான். நீங்களும் இந்த எஸ்றாவைப்போல வேதாகமத்திலும் ஆண்டவருடைய கட்டளைகளை மனப்பாடம் செய்வதிலும் அவைகளை கைக்கொள்வதிலும். தேர்ச்சி அடைவீர்களா! அப்படி தேர்ச்சி அடைவீர்கள் என்றால் கர்த்தர் எஸ்றாவோடு இருந்தது போல உங்களோடும் இருப்பார்.

மேலும். எஸ்றா கர்த்தருடைய வேதத்தை ஆராயவும். அதன் படி செய்யவும். இஸ்ரவேலிலே கட்டளைகளையும். நீதி நியாயங்களையும். உபதேசிக்வும். தன் இருதயத்தை பக்குவப்படுத்தி இருந்தான். கர்த்தருடைய வேதத்தை கேட்கிற நாம் அதை குறித்து அசட்டையாக இருக்கலாமா? அநேகர் பாருங்கள் பிரசங்கியார் பிரசங்கிக்கும்போது அடுத்தவனை கூப்பிடுவது அடுத்தவனை கிள்ளி வைப்பது மேலே எதையாவது பார்த்துக்கொண்டு இருப்பது இப்படியெல்லாம் செய்யலாமா? கூடாதே! பெரோயா பட்டணத்தார்களைப்போல ஆராயவும். அதன்படி செய்யவும் முயற்சிக்கவேண்டும். புதையல்களை தேடுகிறதுபோல தேடினால் தானே ஆசீர்வாதங்களை சுதந்தரிக்கமுடியும். அப்படிச் செய்வீர்களா! எஸ்றாவைப் போல வளருங்கள் கர்த்தர் உங்களோடு இருப்பார். இந்த ஆண்டில் இப்படி செய்வீர்களா!

**மனப்பாட வசனம்:**


"கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும். இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதி. நியாயங்களையும் உபதேசிக்கவும். எஸ்றா தன் இருதயத்தை பக்குவப்படுத்தியிருந்தான்" (எஸ்றா 7:10)

# வேத அறிவுப் போட்டி எண்.113


போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. இந்த வீடு பாழாய்க் கிடக்கும்போது, நீங்கள் மச்சுப்பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும்படியான காலம் இதுவோ? என்று எந்த தீர்க்கன் மூலம் கர்த்தர் பேசினார்?
2. அவர்கள் புறஜாதியாரிடத்தில் ஒன்றும் வாங்காமல் அவருடைய நாமத்தினிமித்தம் புறப்பட்டுப்போனார்கள் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. இரத்தப்பழிகளாலே பட்டணத்தைக் கட்டி, அநியாயத்தினாலே நகரத்தைப் பலப்படுத்துகிறவனுக்கு என்ன?
4. ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு என்ன செய்வேன் என்று ஆவியானவர் மூலம் கர்த்தர் திருவுளம்பற்றுகிறார்?
5. கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை, தம்மை நம்புகிவர்களை அவர் அறிவாரா?
6. நான் உம்மாலே ஞானஸ்நானம்பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்ற தீர்க்கன் யார்?
7. சிநேகிதனை விசுவாசிக்கவேண்டாம், வழிகாட்டியை நம்பவேண்டாம் என்ற தீர்க்கன் யார்?
8. இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: நான் ஜெபம்பண்ணுமளவும் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லிய இடத்தின் பெயர் என்ன?
9. தேவன் யாரை நோக்கி: நீ ஆமணக்கினிமித்தம் எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்றார்?
10. நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்று எந்த சீஷனைப் பார்த்து இயேசு சொன்னார்?




**Bro.RAJAMANI,** Evangelist,
Church of Christ, Puthupandiapuram
Konganthanparai - 627 007,
**TRINELVELI DISTRICT, S.INDIA.** Mobile: 99408 41932.
Sunday Worship : 12.30 p.m. Daily prayer - 7.45 p.m.



Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2009-2011
Posted at Batlagundu Post Office on 10th Jan.2010




## THE 1st WORLD EVANGELISM RETREAT at KODAIKANAL

**உங்கள் வானொலியில்**

இலங்கை ஆசிய சேவை
SW 25 *மற்றும்* 41 மீட்டரில்
ஒவ்வொரு சனிக்கிழமை மாலை
5.30 *முதல்* 5.45 மணி வரை
கேட்டு பயன் பெறுங்கள்

**உங்கள் தொலைக்காட்சியில்**

**TAMILAN TV**
EVERY Monday 6.00 - 6.15 a.m
**IMAYAM TV**
EVERY Wednesday 6.30 - 6.45 a.m.

**BATLAGUNDU CHURCH OF CHRIST**
*MEETS HERE*
**17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202, DINDIGUL DISTRICT, S.INDIA.**
Phone : 04543 263278, Mobile: 94435 58041
e-mail: thewordofchrist@sancharnet.in
Website: www.thewordofchristindia.com

*Postal Address:*
**THE WORD OF CHRIST**
**POST BOX No. 5**
**BATLAGUNDU - 624202**
**S.INDIA**